



# டார்னிங் ஃபுட்

## இந்த பாடத்திலே , உஷா ஜெனோம் டார்னிங்ஃபுட்- ஐ யூஸ் பண்றது பத்தி தெரிஞ்சுக்குவீங்க.




இதுக்கு ரெண்டு பயன்கள் இருக்கு. ஒண்ணு கிழிஞ்சதை, தைக்கலாம், அதே சமயம் ஃப்ரீ மோஷன் எம்ப்ராய்டரி பண்ணலாம்.

டார்னிங் ஃபுட்-,தையல் சரியா விழறதுக்கும், தையல் விழாம போறதைக் குறைக்கறதுக்கும், ஊசிக்குக் கீழே துணி ஃப்ரீ-ஆ, மூவ் ஆகும் போது, உங்க விரல்களைப் பாதுகாக்கறதுக்கும், உறுதியளிக்குது.

இந்த பாடத்துக்கு உங்களுக்குத் தேவையானது, உஷா ஜெனோம் டார்னிங்ஃபுட்,ஒரு சதுர துணி, ஃப்ரீ மோஷன் டார்னிங் ப்ராக்டிஸ் பண்றதுக்கு, --இதை, எம்ப்ராய்டரி டிசைன்ஸ் செய்யவும் பயன்படுத்தலாம். மெண்டிங் பண்றதை கத்துக்கறதுக்கு ஒரு கிழிஞ்ச துணி, கிழிஞ்ச துணிக்கு மேட்ச்- ஆன,கிழிஞ்ச இடத்தை மறைக்கறதுக்கான,ஒரு துணி, எம்ப்ராய்டரி ஹூப், மார்க்கர், ஸ்கேல், நூல், ஒரு ,கத்தரிக்கோல்..

முதல்லே, டார்னிங் ஃபுட்-ஐ, யூஸ் பண்ணி,கிழிஞ்ச துணியை எப்படி இணைக்கறது-ன்னு கத்துக்கலாம். நார்மல் ப்ரெஸ்ஸர் ஃபுட் -ஐ எடுத்துட்டு, டார்னிங்ஃபுட்-ஐ வையுங்க.அடுத்த ஸ்டெப்-ஐ கவனமா பாருங்க.நான் இதை எப்படி செய்யறேன்னு பாருங்க. டார்னிங்ஃபுட்- னுடைய ஒயிட் போர்ஷன்-ஐ, மெஷின்-லே இந்த மாதிரி, ஸ்க்ரூ பண்ணி, அட்டாச் பண்ணுங்க. டார்னிங்ஃபுட் -னுடைய லாங் ஆர்ம், நீடில் க்ளாம்ப் ஸ்க்ரூ-க்கு மேலே இருக்கணும்.

ஃபுட்-ஐ, அட்டாச் பண்ண பிறகு, நீடில் ப்ளேட்-லே இருந்து, ஃபீட் டாக்-ஐ எடுத்திடுங்க.அதை செய்யறதுக்கு, மெஷின்- னுடைய முன்பகுதியைத் திறந்து, ஃபீட் டாக் -ஐ, வெளியிலே இழுத்துடுங்க... இந்த மாதிரி.. அப்புறம், முன் பகுதியை மூடிடுங்க.










அடுத்து, உங்க மெஷினை செட் பண்ணுங்க. த்ரெட் டென்ஷன் -ஐ, மூணுக்கும், நாலுக்கும் இடையிலே, செட் பண்ணுங்க. ஸ்டிச் A-வை செலக்ட் பண்றதுக்கு, பேட்டர்ன் டயல்-ஐ, செட் பண்ணுங்க.அப்புறம் ஸ்டிச் லெந்த்-ஐ, உங்க விருப்பப்படி, செட் பண்ணிக்கலாம்.

முதல்லே கிழிஞ்ச துணியை எடுத்துகிட்டு,அதுக்கு மேட்ச் ஆன இன்னொரு துணியைக், கிழிசலுக்குக் கீழே வைக்கணும்.

சேர்த்து வெச்ச துண்டுகளை டார்னிங்ஃபுட்-க்குக் கீழே வெச்சு,ஊசியைக் கீழே இறக்கி தைக்க ஆரம்பியுங்க.

முதல்லே, கிழிசல் நீளத்துக்கு, மேலேயும், கீழேயும் வரிசைகளா தையல் போடுங்க,அப்போ, சின்ன துண்டு அதிலே அட்டாச் ஆயிடும்.




நீளவாக்கிலே தையல் வரிசைகளை போட்டு முடிச்ச பிறகு,அது உறுதியா இருக்கறதுக்கு, குறுக்கிலே தையல் வரிசைகளை போடணும். அதுக்கு, ப்ரெஸ்ஸர்ஃபுட்-ஐ, மேலே தூக்கி, துணியை, 90-டிகிரி கோணத்திலே திருப்புங்க. ப்ரெஸ்ஸர்ஃபுட்-ஐ, கீழே இறக்கி, ஓட்டைக்கு குறுக்கிலே தையல் வரிசைகளை போட ஆரம்பியுங்க. ஓட்டை, தையல்கள்-னாலே கவர் ஆயிடுச்சுன்னா,அதிகப்படியான நூலை வெட்டிடுங்க.வேலை முடிஞ்சது.

இப்போ தெரிஞ்சுகிட்டதை பத்திய எக்சைட்மெண்ட்-முடிஞ்சதுன்னா,நல்ல ஆழ்ந்த மூச்சு விடுங்க.ஏன்னா,இந்த ஃபுட்-க்கு இன்னொரு யூஸ் இருக்கு ஃப்ரீ மோஷன் எம்ப்ராய்டரி பத்தி நீங்க, நிச்சயமா கத்துக்கணும்.






பயிற்சிக்காக எடுத்த துணியிலே நடுவிலே 6-செ.மீ சதுரம் வரைஞ்சுக்கங்க. துணியிலே, சதுரம் வரைஞ்ச பிறகு, ஹூப்-லே இருக்கிற ரெண்டு வளையங்களுடைய ஸ்க்ரூ- வை கழட்டிடுங்க. ஸ்க்ரூ இருக்கிற அவுட்டர் ரிங்- ஐ, முதல்லே கீழேவெச்சு அதுக்குமேலே துணியை வெச்சு, ரெண்டு ஃப்ரேம்- களுக்கு இடையிலே துணி, அழுத்தி பிடிக்கற மாதிரி, சின்ன, உள் வளையத்தை,மேலே வையுங்க. துணி சரியா அதனோட இடத்திலே உறுதியா இருக்கறதுக்கு, ஸ்க்ரூ-வை, டைட் பண்ணுங்க. இப்போ, டார்னிங்ஃபுட்-ஐ,சதுரத்துக்கு நடுவிலே வெச்சு, ப்ராக்டிஸ் பண்ண ஆரம்பிக்கலாம். ஹூப்-ஐ மெஷின் கீழே வெச்சு,சதுரத்துக்கு மேலே நீடில்-ஐ, பொசிஷன் பண்ணனும்.நீங்க தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னே, நீடில் கீழே இருக்கான்னு பார்த்துக்கங்க.



சதுரத்தினுடைய உள்பக்கத்திலே,நேர்க்கோடா தைக்கறதுக்கு முயற்சி செய்து பாருங்க.முடியலேன்னா, கவலைப்படாதீங்க. அது உங்களுக்கு சீக்கிரம் பழக்கமாயிடும்.இந்த ஃபுட்-லே இருக்கிற வேடிக்கை,இது தான்,-ஃப்ரேம்-ஐயும், அதோட தையலையும், எந்த டைரக்ஷன்-லேயும், மூவ் பண்ணக்கூடிய ஃப்ளெக்ஸிபிலிடி-ஐ,அது,கொடுக்குது.சதுரத்தினுடைய கடைசிக்கு வந்துட்டீங்கன்னா, ஃப்ரேம் -ஐ,







ஆப்போசிட் டைரக்ஷன்-லே மூவ் பண்ணுங்க.அப்போ, தையல் பின்பக்கமா விழும். மேலேயும், கீழேயும் கோடுகளா தையல் போடுங்க.நேர்க்கோடுகள் போடறது உங்களுக்கு கம்ஃபர்டபிள்-ஆ இருந்தா,உங்க வேகத்தை, அதிகமாக்க முயற்சி பண்ணுங்க.வேகமா மூவ் பண்ணும் போது, உங்க தையல் நீளமும் பெருசா இருக்கும். பழக்கம் வந்துடுச்சுன்னா, ஸ்ட்ரெயிட் லைன்ஸ் -ஐ, நெருக்கமா தையுங்க. ஸ்ட்ரெயிட் லைன்ஸ் -ஐ, மாஸ்டர் பண்ணிட்டீங்கன்னா, ஹூப் -ஐ,மூவ் பண்ணி, வளைவுகளை ட்ரை பண்ணுங்க. இண்டரிஸ்டிங்-ஆ, இருக்கு, இல்லையா ?நீங்க இப்போ, தைச்ச கோடுகள் சரியா இல்லைன்னா கூட, அது ஒரு கலை படைப்பு மாதிரி இருக்கு இல்லையா ?

ஸ்ட்ரெயிட் லைன்ஸ் -ஐயும், கர்வ்ட் லைன்ஸ்-ஐயும் யூஸ் பண்ணி, ஃப்ரீ மோஷன் எம்ப்ராய்டரி எப்படி பண்றதுன்னு, இப்போ நீங்க கத்துகிட்டீங்க.ஏற்கனவே வரைஞ்ச பேட்டர்ன்ஸ்-லே, முயற்சி பண்ணிப்பாருங்க.எந்தவகையான ஃப்ரீ மோஷன் எம்ப்ராய்டரி -க்கும், இந்த டெக்னிக்-ஐ நீங்க பயன்படுத்தலாம்.நல்ல க்ரியேடிவ்-ஆ, உங்களுடைய ஆர்ட் பீஸஸ்-ஐ செய்யுங்க. டார்னிங்ஃபுட்- னுடைய, பல செயல்பாடுகளையும், வேடிக்கையா பயன்படுத்துங்க.

நல்லா செய்யுங்க, -ஃப்ரீ ஹாண்ட் டிசைன்ஸ் , அப்ஸ்ட்ராக்ட்ஸ் ஜியோமெட்ரிகல் டிசைன்ஸ்-ஐ, வரையுங்க

உங்க, டார்னிங் ஸ்கில்ஸ்-ஐ, டெஸ்ட் பண்ணுங்க.உங்க பழைய டெனிம்ஸ்-ஐ, இல்ல,- ரொம்ப போரிங்-ஆ, இருக்கிற எந்த துணியையும், புதுமையா ஆக்கணும்,-னு நினைச்சா, நான் உங்களுக்கு உறுதியா சொல்றேன்,இந்த ஒரு ஃபுட்-ஐ நீங்க யூஸ் பண்ணலாம். டார்னிங் -ஐ, ஃபேப்ரிக் ஆர்ட் ஆ, க்ரியேட் பண்றதுக்கு, ஒரு டெக்ஸர்-ஆ, யூஸ் பண்ணலாம்.